செ.வெ.எண்: 7 நாள்:06.10.2020

## கரூர் மாவட்டம்

**முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு முன்னாள் படைவீரர் நலத்துறையிலிருந்து வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை தகுதியுடையோர் முறையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

1. இராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியமின்றி, பணிக்கொடை பெறாத, வறிய நிலையில் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முன்னாள் படைவீரர் / விதவையர்களுக்கு ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி

2. கண்பார்வையற்றோர், புற்றுநோய், காசநோய், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டோர், உடல் ஊனமுற்றோர், உடல் வளர்ச்சி குன்றியோர், மன வளர்ச்சி குன்றியோர் ஆகியோருக்குக்கான மருத்துவ நிதியுதவி

3 முன்னாள் படைவீரர் மற்றும் விதவையர்களின் 2 பெண் குழந்தைகளுக்கான திருமண நிதியுதவி

4. போரில் இறந்த படைவீரரின் விதவையர், போரில் ஊனமுற்ற படைவீரர் மற்றும் முன்னாள் படைவீரரின் விதவையர்களுக்கு வீட்டுவரிச் சலுகை மீளப் பெறுதல்

5 முன்னாள் படைவீரர் / விதவையர்களுக்கு வீடுகட்டும் வீட்டுக் கடன் மானியம்

6 முன்னாள் படைவீரர் / விதவைர்கள் இறந்தமைக்கு ஈமச்சடங்கு மானியம்

7 கண்கண்ணாடி, செயற்கை பற்சட்டம் பெறுவதற்கான நிதியுதவி

மேற்காணும் அனைத்து நிதியுதவிகளும் விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் மேற்காணும் இச்சலுகைகளை அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை 0431-2960579 என்ற எண்ணிலோ அல்லது நேரிலோ அனுகிடுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தங்களது பதிவினை கணிணியில் பதிவேற்றம் செய்யாதவர்கள், உடன் பதிவேற்றம் செய்து கொள்ளமாறும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப. அவர்கள் தகவல் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**